29.06.2015

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## 127 அடியை எட்டியது பெரியாறு

கூடலூர்:பெரியாறு அணை நீர்பிடிப்பு பகுதியில் பெய்த கன மழையால் அணையின் நீர்மட்டம் 127 அடியை எட்டியதால் தமிழகப்பகுதிக்கு திறக்கப்படும் நீரின் அளவு 1300 கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.பெரியாறு அணை நீர்பிடிப்பு பகுதியில் கடந்த சில தினங்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால் அணைக்கு நீர்வரத்து வெகுவாக அதிகரித்து கடந்த ஒரு வாரத்தில் 8 அடி உயர்ந்து, நேற்று மாலை நிலவரப்படி 127 அடியை எட்டியது. அணைக்கு நீர்வரத்து 4469 கன அடியாக இருந்தது. நீர்வரத்து அதிகரித்து நீர்மட்டம் 127 அடியை எட்டியது.இதைத் தொடர்ந்து, தமிழகப்

பகுதிக்கு திறக்கப்படும் நீரின் அளவு 1300 கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

நீர் இருப்பு 3985 மில்லியன் கன அடியாகும். பெரியாறில் 14.8 மி.மீ., தேக்கடியில் 3.6 மி.மீ., மழையும் பதிவாகியுள்ளது. தொடர்ந்து நீர்பிடிப்பு பகுதியில் மழை பெய்து வருவதால் அணையின் நீர்மட்டம் மேலும் உயரும். அணையின் நீர்மட்டம் 136 அடியைக் கடந்து விடுமா என்ற எதிர்பார்ப்பில் விவசாயிகள் உள்ளனர்.

## இறால் 'வேட்டை' அமோகம்

ராமேஸ்வரம்:கடந்த சில நாட்களாக, ராமேஸ்வரம், தனுஷ்கோடி, பாம்பன் பகுதிகளில் வீசிய சூறாவளியால் ஜூன் 22 தேதி முதல் மீனவர்கள் கடலுக்கு செல்ல மீன்துறை அதிகாரிகள் தடை

விதித்தனர்.ஜூன் 27ல் சூறாவளி வேகம் குறைந்ததையடுத்து மீனவர்கள் தொழிலுக்குச் சென்றனர்.

இவர்கள் வழக்கம் போல் மீன்பிடித்து விட்டு, நேற்று கரை திரும்பினர். ஐந்து நாட்களுக்கு பிறகு படகிற்கு 50 கிலோ வீதம் இறால் சிக்கியதால் மீனவர்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

## நெல்லையில் தென்மேற்கு பருவமழை

திருநெல்வேலி : ஜூன், ஜூலையில் பெய்யும் தென்மேற்கு பருவமழை நெல்லை மாவட்டத்தின் மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியில் பெய்துவருகிறது. இதனால் அணைகளின் நீர்மட்டம் உயர்ந்துவருகிறது. அதிகபட்சமாக பாபநாசத்தில் 43 மி.மீ.,மழை பதிவாகியது. பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 6 ஆயிரத்து 413 கனஅடி வீதமும், சேர்வலாறு அணைக்கு விநாடிக்கு 3 ஆயிரத்து 500 கனஅடியும், மணிமுத்தாறு அணைக்கு விநாடிக்கு 770 கனஅடியும் நீர்வரத்து இருந்தது. பாபநாசம் அணையின் நீர்மட்டம் 81 அடியாகவும், சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 100.20 அடியாக ஆனது. மணிமுத்தாறு, கடனாநதி, ராமநதி, கருப்பாநதி, குண்டாறு, அடவிநயினார், வடக்குபச்சையாறு உள்ளிட்ட மற்ற அணைகளுக்கும் தொடர்ந்து நீர்வரத்து இருப்பதால் நீர்மட்டம் உயர்ந்துவருகிறது.

## ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து அதிகரிப்பு

ஒகேனக்கல் : ஒகேனக்கல் காவிரி ஆற்றில், தண்ணீர் வரத்து தொடர்ந்து அதிகரித்து வருவதால், இன்று (ஜூன், 29) அருவிகளில் சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்படும் என, தெரிகிறது. கர்நாடக மாநிலத்தில், தென்மேற்கு பருவமழை தீவிரம் அடைந்து வருவதை அடுத்து, கபினி, கே.ஆர்.எஸ்., உள்ளிட்ட அணைகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்தது. இதையடுத்து, இரு அணைகளும், முழு கொள்ளளவை எட்டுகின்றன. கர்நாடக அரசு, இரு அணைகளின் பாதுகாப்பு கருதி, கடந்த, நான்கு நாட்களுக்கு முன், காவிரியில் இருந்து, தமிழகத்துக்கு, வினாடிக்கு, 18 ஆயிரத்து, 889 கன அடி தண்ணீர் திறந்து

விட்டது. இந்நிலையில், நேற்று மதியம் நிலவரப்படி, ஒகேனக்கல்லில் வினாடிக்கு 19,250 கன அடிநீர் வந்து கொண்டுள்ளது. இதனால், 'இன்று முதல், ஒகேனக்கல் அருவி பகுதியில், சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்க, மாவட்ட நிர்வாகம் முடிவு செய்துள்ளது' என, அதிகாரிகள் தெரிவித்தனர்.

## உயரும் வைகை அணை

ஆண்டிபட்டி:பெரியாறு அணை நீர் வரத்து மற்றும் நீர்பிடிப்பு பகுதிகளில் மழையால் வைகை அணையின் நீர் மட்டம் உயர்ந்து வருகிறது.

பெரியாறு அணையில் இருந்து பாசனத்திற்கு திறக்கப்பட்ட நீரில் குறிப்பிட்ட அளவு வைகை அணைக்கு வருகிறது. மேலும் வருஷநாடு மலைப்பகுதியில் மழையால் மூலவைகை ஆற்றிலும், கொட்டக்குடி ஆற்றிலும் நீர் வரத்து உள்ளது. இதனால் படிப்படியாக அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. ஜூன் 25 ல் வினாடிக்கு 81 கன அடியாக இருந்த நீர் வரத்து நேற்று வினாடிக்கு 730 கன அடியாக அதிகரித்தது. நீர்வரத்து அதிகரிப்பால் அணையின் நீர் மட்டம் நேற்று 45.08 அடியாக உயர்ந்தது.

## இலவச கால்நடை மருத்துவ முகாம்

உத்திரமேரூர்: அத்தியூர் மேல்துாளி கிராமத்தில், இலவச கால்நடை மருத்துவ முகாம், நேற்றுமுன்தினம் நடந்தது.புதுவாழ்வு திட்டம் மற்றும் தமிழ்நாடு கால்நடை பராமரிப்பு துறை இணைந்து நடத்திய இம்முகாமில், கால்நடை மருத்துவ குழுவினர் கலந்து கொண்டு அப்பகுதியில் பராமரிக்கப்படுகின்ற கால்நடைகளை பரிசோதித்தனர். குடற்புழு நீக்கம் செய்தல், மலட்டுத் தன்மைக்கு சிறப்பு சிகிச்சை அளித்தல், சினைப் பரிசோதனை செய்தல், செயற்கை முறை கருவூட்டல் போன்றவைகளுக்கான சிகிச்சைகள் இம்முகாமில் அளிக்கப்பட்டன.மேலும், முகாமின் போது கால்நடைகளை பராமரித்து பாதுகாப்பது குறித்தும், கால்நடை தீவனப்பயிர் உற்பத்தி செயல் விளக்கம் குறித்தும், கால்நடை வளர்ப்பவர்களுக்கு ஆலோசனைகள்

வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில், புது வாழ்வு திட்ட பால்வள ஆலோசகர் அம்பேத்கர், கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குனர் (பொறுப்பு) பால்ராஜ், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## மேட்டூர் அணையின் நீர்மட்டம் 78.80 அடியாக உயர்வு

மேட்டூர்: மேட்டூர் அணையின் நீர்மட்டம் 78.80 அடியை எட்டியுள்ளது. அணைக்கு நீர்வரத்து 19,577 கனஅடி, நீர்திறப்பு விநாடிக்கு 1,001 கனஅடி, நீர்இருப்பு 40.77 டி.எம்.சி.,யாகவும் உள்ளது. கடந்த 3 நாட்களில் மட்டும் 4.25 அடி நீர்மட்டம் உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## மாவட்டத்தில் 6,794 மெட்ரிக் டன் உரம் இருப்பு

நாமக்கல்:"மாவட்டத்தில் விவசாயிகளுக்கு தேவையான பல்வேறு வகையான உரங்கள், 6,794 மெட்ரிக் டன் அளவு உரம் இருப்பு வைக்கப்பட்டுள்ளது' என, நாமக்கல் கலெக்டர் தட்சிணாமூர்த்தி தெரிவித்துள்ளார்.அவர், வெளியிட்ட அறிக்கை:நாமக்கல் மாவட்டத்தில், 165 தொடக்க வேளாண் கடன் சங்கங்கள் மற்றும், மூன்று லேம்ப் கூட்டுறவு சங்கங்கள் என, மொத்தம், 168 கூட்டுறவு சங்கங்கள் மூலம், விவசாயிகளுக்கு தேவையான உரங்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இதில், 1,065 மெட்ரிக் டன் யூரியா, 878 மெ.டன் டி.ஏ.பி, 645, மெ.டன் பொட்டாஷ், 1,727 மெ.டன் காம்பளக்ஸ், 35 மெ.டன் சூப்பர் பாஸ்பேட் என மொத்தம், 4,350 மெ.டன் உரம் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் உள்ள, 255 தனியார் உர விற்பனை நிலையங்களில், 817 மெட்ரிக் டன் யூரியா, 113 மெ.டன் டி.ஏ.பி., 273, மெ.டன் பொட்டாஷ், 852, மெ.டன் காம்பளக்ஸ், 275 மெ.டன் சூப்பர் பாஸ்பேட், 114 மெ.டன் அமோனியம் சல்பேட் என, மொத்தம், 2,444 மெ.டன் உரங்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

அதேபோல், 168 கூட்டுறவு சங்கங்கள், 255 தனியார் உர விற்பனை நிலையங்களில், விவசாயிகளுக்கு தேவையான பல்வேறு வகையான உரங்கள், 6,794 மெ.டன் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. மேலும், 27,084

எண்ணிக்கையில், உயிர் உரங்களும், 23 மெ.டன் நுண்ணூட்டச்சத்து, 46,797 லிட்டர் பயிர் பாதுகாப்பு மருந்து இருப்பு வைக்கப்பட்டுள்ளது.விவசாயிகளுக்கு அவ்வப்போது தேவைப்படும் வேப்பம்புண்ணாக்கும் கூட்டுறவு சங்கங்களில் இருப்பு வைக்க வேண்டும் என, உத்தரவிடப்பட்டுள்ளது.

வேப்பம்புண்ணாக்கு தேவைப்படும் விவசாயிகள், அருகிலுள்ள கூட்டுறவு சங்கங்களுக்கு சென்று, தங்களுக்கு தேவைப்படும் வேப்பம்புண்ணாக்கு அளவு பட்டியலை அளித்தால் உடனடியாக கொள்முதல் செய்து தரப்படும்.இருப்பில் வைக்கப்பட்டுள்ள உரங்களை, எவ்வித புகாருக்கும் இடம் அளிக்காமல் விவசாயிகளுக்கு தேவையான அளவு உடனுக்குடன் வழங்க வேண்டும்.இவ்வாறு, அதில் கூறப்பட்டுள்ளது.

## மழை காலத்திலும் உரம் தயாரிப்பு பணி:குப்பை கிடங்கில் ஷெட் அமைக்க முடிவு

ஈரோடு:ஈரோடு மாநகராட்சியில், வெண்டிபாளையம் குப்பை கிடங்கில், மழை காலத்தில் உரம் தயாரிப்பு பணி தொய்வடைவதை தடுக்கும் வகையில், ஷெட் அமைக்க பரிசீலனை செய்யப்படுகிறது.ஈரோடு மாநகராட்சியில் உள்ள, 60 வார்டுகளில் இருந்து தினமும், 270 டன்னுக்கு மேற்பட்ட குப்பைகள் சேகரமாகின்றன. பொங்கல், தீபாவளி போன்ற பண்டிகை காலங்களில், 100 டன் கூடுதலாக சேரும். குப்பைகளை, உரமாக மாற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டம், கடந்த, 2006-07ல் ஈரோடு மாநகராட்சியில் அறிமுகப்படுத்தப்பட்டது.

இதையடுத்து தனியார் நிறுவனமான ஐ.எஃப்.எஸ்.எல்., மூலமாக, தினமும் வெண்டிபாளையத்தில் சேரும், 100 டன் குப்பைகள், 45 நாள் பிராசஸ் செய்து, உரமாக மாற்றி ஸ்பிக் உள்ளிட்ட தனியார் நிறுவனங்களுக்கு, விற்பனை செய்யப்படுகிறது. இந்த நிறுவனம், ஈரோடு, பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, குன்னூர், மேட்டுப்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில், குப்பையை உரமாக மாற்றும் பணியை செய்து வருகிறது.

இங்கு கடந்த, 2009ம் ஆண்டு முதல் குப்பையை உரமாக்கும் பணி நடந்து வருகிறது. இதில், 40க்கும் மேற்பட்டோர் பணிபுரிகின்றனர். ஈரோடு வெண்டிபாளையம் குப்பை கிடங்கில், நான்கு ஏக்கர் பரப்பளவில் உரமாக்கும் பணி நடக்கிறது.தினமும், 15 டன் வரை, கடந்த வாரம் வரை உரம் தயாரிக்கப்பட்ட நிலையில், கடந்த, மே மாதத்தில் மழையால், உற்பத்தி குறைந்தது. தற்போது, எட்டு டன் வரை உரம் உற்பத்தி அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து, மேலாளர் சரவணன் கூறியதாவது:வெண்டிபாளையம் குப்பை கிடங்கில் இருந்து துவக்கத்தில், ஒன்பது டன் முதல், 10 டன் வரை, உரம் உற்பத்தி செய்யப்பட்டு, பின்னர், 15 டன்னாக உயர்ந்தது.கடந்த மாதம் பெய்த மழையால் உற்பத்தி வெகுவாக சரிந்து, தற்போது, 8 முதல், 10 டன் வரை படிப்படியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. விரைவில், 15 டன் இலக்கு எட்டப்படும்.நான்கு ஏக்கர் பரப்பளவில் நடக்கும் குப்பையை உரமாக்கும் இடத்தில், மேற்கூரை அமைத்தால், மழை காலங்களிலும், தொய்வின்றி உற்பத்தி தயாரிக்கப்படும். எனவே, மேற்கூரை அமைப்பது குறித்து பரிசீலனை செய்து வருகிறோம்.இவ்வாறு அவர் கூறினார்.

**வத்தலக்குண்டு பகுதியில் மானாவாரி எள் சாகுபடி**

வத்தலக்குண்டு:வத்தலக்குண்டு ஒன்றிய பகுதிகளில் மானாவரி எண்ணெய் வித்துப் பயிரான எள் சாகுபடி அதிகளவில் செய்யப்பட்டு உள்ளது.வத்தலக்குண்டு ஒன்றியத்தில் வாழை, தென்னை, நெல் போன்ற நன்செய், கம்பு, சோளம் மற்றும் எள், ஆமணக்கு, கடலை ஆகிய எண்ணெய் வித்து பயிர்கள் விளைவிக்கப்படுகின்றன. கடந்த காலங்களில் மழை அளவு குறைந்து நிலத்தடி நீர்மட்டம் ஆயிரம் அடிகளுக்கு மேல் சென்றது.3 மாதங்களுக்கு முன் பெய்த மழையில் நிலத்தடி நீர்மட்டம் சிறிதளவு உயர்ந்தது. ஆனால் கிணறுகளில் ஊற்றெடுக்கவில்லை.மழையால் கிடைத்த நீரை பயன்படுத்தி 90 நாட்களுக்குள் விளையும் குறுகிய எண்ணெய் வித்தான எள்ளை பரவலாக விவசாயிகள் பயிரிட்டுள்ளனர்.

மலையப்பன்பட்டி விவசாயி பழனிவேல்,30, கூறுகையில்,""செலவு குறைவு என்பதாலும், சில மாதங்களாக எள்ளிற்கு நல்ல விலை கிடைத்து வருவதாலும் விதைத்தேன்'' என்றார்.

வத்தலக்குண்டு வேளாண் உதவி இயக்குநர் கோபால்ராஜ் கூறுகையில்,"" கடந்த 5 ஆண்டுகளாகவே எள்ளுக்கு கிலோ ரூ. 60க்கு மேல் விலை கிடைக்கிறது.ஒரு ஏக்கரில் 500 கிலோ எள் அறுவடை செய்யலாம். இதனால் ஏக்கரில் குறைந்தது 3 ஆயிரம் ரூபாய் லாபம் கிடைக்கும். பரவலாக கோவை, திண்டிவனம் ரகங்கள் விதைக்கப்படுகிறது'' என்றார்.

## முருங்கை விலையில் சரிவு: புடலை, பாகற்காய் ஏற்றம்

ஒட்டன்சத்திரம்:ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் முருங்கை, கொத்தவரை விலை சரிந்தது. பாகற்காய், புடலை விலையோ அதிகரித்தது. ஒட்டன்சத்திரம் காய்கறி மார்க்கெட்டில் நேற்று உள்ளூர் முருங்கை வரத்து அதிகமாக இருந்ததால் முருங்கை விலை சரிவடைந்தது.

சென்ற வாரம் ஒரு கிலோ முருங்கை ரூ.65 க்கு விற்றது. இதன் விலை குறைந்து வெள்ளியன்று ரூ.33 க்கு விற்றது.

நேற்று இதன் விலை கிலோவுக்கு ரூ.7 வரை சரிந்து ரூ.26க்கு விற்றது. இதேபோல் கொத்தவரை விலையும் ரூ.11 லிருந்து ரூ.2 குறைந்து ரூ.9 க்கு விற்றது. அதேசமயம் கடந்த வாரம் கிலோ ரூ.13க்கு விற்ற புடலை, பாகற்காய் ஆகியவற்றின் விலை ரூ.4 வரை உயர்ந்து ரூ.17க்கு விற்றது. தக்காளி விலை மாற்றமின்றி 14 கிலோ கொண்ட பெட்டி ரூ.260 க்கு விற்றது.கமிஷன் கடை உரிமையாளர் மூர்த்தி கூறுகையில், ""ரம்ஜான் நோன்பு, கேரளாவில் பலத்த மழை போன்ற காரணங்களால், கேரள வியாபாரிகள் கொள்முதல் அளவை குறைத்துவிட்டனர். இதனால் காய்கறி விலை குறைந்துள்ளது,'' என்றார்.

## விவசாயிகளுக்கு பயன்படும் வீட்டுக் குப்பை

திண்டுக்கல் மாநகராட்சி சார்பில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் சேகரிக்கப்படும் பசுமை கழிவுகள் விவசாயிகளுக்கு ரூ.50க்கு வழங்கப்படுகிறது.திண்டுக்கல் மாநகராட்சியில் சேகரமாகும் குப்பைகள் பழநிரோட்டில் உள்ள குப்பை கிடங்கில் கொட்டப்படுகின்றன. இதில், நாள் ஒன்றுக்கும் 120 டன் குப்பை சேகரமாகின்றன. அதில் மக்கும் மற்றும் மக்காத குப்பைகள் துப்புரவு பணியாளர்களால் 2 டன் அளவில் பிரிக்கப்படுகிறது. இவற்றில் காய்கறி கழிவுகள், வீடுகளில் சேகரமாகும் காய்கறி மற்றும் சமையல் கழிவுகள் பெரும்பகுதி, பசுமை குப்பைகளாக பிரிக்கப்படுகிறது.

இதுதவிர நகரில் சேகரிக்கப்படும் குப்பைகளில் மக்கும் குப்பைகள் பிரிக்கப்படுகிறது. அவை 20 நாட்கள் முதல் 38 நாட்கள் வரை பராமரிக்கப்பட்டு சாக்குப் பையில் அடைக்கப்படுகிறது. இவற்றை விவசாயிகளுக்கு இயற்கை பசுமை உரமாக வழங்ககின்றனர். இதற்கு விலையாக மூடை ஒன்றுக்கு ரூ.50 வசூலிக்கப்படுகிறது. மாநகராட்சி நகர்நல அலுவலர் டாக்டர் அனிதா கூறுகையில், ""சேகரமாகும் குப்பைகள் முறைப்படி மக்கும் குப்பை; மக்காத குப்பைகளாக பிரிக்கப்படுகிறது. அதை அதிக நாட்கள் இயற்கை முறையில் கிளறிவிட்டு பாதுகாக்கிறோம். கிலோ ரூ.2க்கு விவசாயிகளுக்கு விற்பனை செய்கிறோம். இயற்கை முறையிலான, பசுமை உரம் என்பதால் பயிர்களுக்கு மிகவும் ஏற்றதாக இருக்கும். எனவே விவசாயிகள் விரும்பி வாங்கிச் செல்கின்றனர், என்றார்.

## நெல்லையில் தென்மேற்கு பருவமழை அணைகள் நீர்மட்டம் கிடுகிடுஉயர்வு

திருநெல்வேலி: மேற்குத் தொடர்ச்சி மலையில் தொடர்ந்து மழை பெய்துவருவதால் சேர்வலாறு அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 15 அடி உயர்ந்தது. பாபநாசம் அணையின் நீர்மட்டம் 8 அடி உயர்ந்து 81 அடியானது. ஜூன், ஜூலையில் பெய்யும் தென்மேற்கு பருவமழை நெல்லை மாவட்டத்தின் மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியில்

தொடர்ந்து பெய்துவருகிறது. இதனால் அணைகளின் நீர்மட்டம் உயர்ந்துவருகிறது. அதிகபட்சமாக பாபநாசத்தில் 43 மி.மீ.,மழை பதிவாகியது. பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 6 ஆயிரத்து 413 கனஅடி வீதமும், சேர்வலாறு அணைக்கு விநாடிக்கு 3 ஆயிரத்து 500 கனஅடியும், மணிமுத்தாறு அணைக்கு விநாடிக்கு 770 கனஅடியும் நீர்வரத்து இருந்தது.பாபநாசம் அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 8 அடி உயர்ந்து 81 அடியாகவும், சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 15 அடி உயர்ந்து 100.20 அடியாக ஆனது. மணிமுத்தாறு, கடனாநதி, ராமநதி, கருப்பாநதி, குண்டாறு, அடவிநயினார், வடக்குபச்சையாறு உள்ளிட்ட மற்ற அணைகளுக்கும் தொடர்ந்து நீர்வரத்து இருப்பதால் நீர்மட்டம் உயர்ந்துவருகிறது.

தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**ஜூலை, ஆகஸ்டில் குறைவான மழை**

நாட்டில், அடுத்த 2 மாதங்களில் மழை வழக்கத்தைவிடக் குறைவாக இருக்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது. இதுதொடர்பாக, அந்த மையத்தின் இயக்குநர் லட்சுமண் சிங் ராத்தோர் கூறியதாவது:

இந்த மாதம், நாட்டில் நல்ல மழை இருந்தது. இது விதைப்பிற்கு ஏற்ற மாதம் ஆகும். வழக்கமாகப் பெய்யும் மழையைவிட 28 சதவீதம் கூடுதலாக, இந்த மாதம் மழை பெய்தது. முன்கூட்டியே தொடங்கிய பருவமழை காரணமாக, நீர்த்தேக்கங்கள் ஓரளவுக்கு நிரம்பி உள்ளன. ஆனால், அடுத்த 2 மாதங்களில் மழைப்பொழிவு குறைவாக இருக்கக்கூடும்.

ஜூலை மாதத்தில் வழக்கமாகப் பெய்யும் மழையைவிட 8 சதவீதமும், ஆகஸ்ட் மாதம் 10 சதவீதமும் குறைவாக மழை பெய்யக்கூடும். எனவே

விவசாயிகள், இந்த கணிப்புக்குத் தகுந்ததுபோல் பயிர்களைத் தேர்வு செய்ய வேண்டும் என்றார் அவர்.

**தேனி, கோவையில் பலத்த மழைக்கு வாய்ப்பு**

தேனி, கோவை, நீலகிரி மாவட்டங்களில் ஞாயிற்றுக்கிழமையன்று பலத்தமழை பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென்மேற்கு பருவமழையின் தாக்கமாக தேனி, கோவை, நீலகிரி ஆகிய மாவட்டங்களில் கனமழை பெய்யும் என்றும், பிற பகுதிகளில் ஆங்காங்கே வெப்பச்சலனத்தின் காரணமாக மழை பெய்யும் என்றும் வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், சனிக்கிழமை காலை வரையிலான 24 மணி நேர நிலவரப்படி சின்னக்கலாறில் 100 மி.மீ. மழையும் வால்பாறையில் 80 மி.மீ. மழையும் பதிவானது. இதேபோல, பெரியாறு 70 மி.மீ., நடுவட்டம் 60 மி.மீ., தேவலா 50 மி.மீ., குளச்சல் 40 மி.மீ., செங்கோட்டை, பாபநாசம், பேச்சிப்பாறை உள்ளிட்ட பகுதிகளில் மழை பெய்துள்ளது.

**இலவச கால்நடை மருத்துவ முகாம்**

உத்தரமேரூர் ஒன்றியத்துக்கு உள்பட்ட அத்தியூர் மேல்தூளி கிராமத்தில் இலவச கால்நடை மருத்துவ முகாம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத் துறை, புதுவாழ்வுத் திட்டம், கால்நடை அறிவியல் பல்கலைக்கழக பயிற்சி ஆராய்ச்சி நிலையம் ஆகியவை இணைந்து இந்த முகாமை நடத்தின. நிகழ்ச்சிக்கு, ஊராட்சி மன்றத் தலைவர் அரிகிருஷ்ணன் தலைமை வகித்தார். புதுவாழ்வுத் திட்ட பால்வள ஆலோசகர் இ.அம்பேத்கார் முன்னிலை வகித்தார்.

கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குநர் (பொறுப்பு) பால்ராஜ் முகாமைத் தொடக்கி வைத்தார். கால்நடை மருத்துவர்கள் பூங்கொடி, லஷ்மி உள்ளிட்டோர் கொண்ட குழுவினர் பங்கேற்று மாடு, கன்றுகள், ஆடுகள் ஆகியவற்றுக்கு குடற்புழு நீக்கம், மலட்டுத் தன்மை, ஆண்மை

நீக்கம், சினைப் பரிசோதனை, செயற்கை முறை கருவூட்டல் உள்ளிட்ட சிகிச்சைகளை அளித்தனர்.

சிறப்பாக கால்நடைகளை பராமரித்தவர்களுக்கு முகாமில் ஊக்கப்பரிசுகள் வழங்கப்பட்டன. கால்நடை வளர்ப்பவர்களுக்கு சிறப்பு ஆலோசனைகளும், அசோலா தீவனப் பயிர் உற்பத்தி செயல்முறை விளக்கமும் அளிக்கப்பட்டன. காவனூர் புதுச்சேரி பகுதி அணித் தலைவர் ஜெ.மணிகண்டன், ஒருங்கிணைப்பாளர்கள் முத்து, விஸ்வநாதன் ஆகியோர் முகாமுக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர். சங்கச் செயலாளர் முனியம்மாள் நன்றி கூறினார்.

**இயற்கை பேரிடர் குறித்து தகவல் தெரிவிக்க ஏற்பாடு**

விருதுநகரில் இயற்கை பேரிடர் குறித்து பொதுமக்கள் கட்டணமில்லா தொலைபேசியில் தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கும் வகையில் அவசர செயல்பாட்டு மையம் அமைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து ஆட்சியர் வே.ராஜாராமன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: இயற்கை பேரிடர்கள் தொடர்பாக தகவல் தெரிவிக்கும் வகையில் அவசர செயல்பாட்டு மையம் ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

இம்மையம் வாரத்தின் அனைத்து நாள்களிலும் 24 மணி நேரமும் செயல்பட்டு வருகிறது.

எனவே இயற்கை பேரிடர்களான இடி மின்னல், வெள்ளம், பெருமழை, சூறாவளி போன்ற இயற்கை இடர்பாடுகளின் காரணமாக மனிதர்கள், கால்நடைகள், பயிர் மற்றும் வீடுகள் ஆகியவை பாதிக்கப்படும் சூழ்நிலையிருக்கிறது.

அதேபோல், சாலை விபத்து, வெடி விபத்து ஆகியவை நேரிடும் போதும், தொற்று நோய்கள் பாதுகாப்பு மற்றும் பொது சுகாதாரம் குறித்து உடனடி உதவிக்கும் அனைத்து விதமான தகவல்களையும் அவசர செயல்பாட்டு மையத்தை கட்டணமில்லா தொலைபேசி எண்-1077 பொதுமக்கள் தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

**மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு**

கர்நாடகத்தின் கபினி அணை நிரம்பியதையடுத்து, அதிகளவில் உபரி நீர் வெளியேற்றப்படுவதால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து ஞாயிற்றுக்கிழமை அதிகரித்தது.

காவிரியின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் தொடர்ந்து பெய்து வரும் மழையையடுத்து, கர்நாடகத்தின் கபினி, கிருஷ்ணராஜசாகர் அணைகளிலிருந்து உபரி நீர் காவிரியில் திறந்துவிடப்படுகிறது. கிருஷ்ணராஜசாகர் அணையின் நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை 102 அடியானது. அணைக்கு நீர்வரத்து நொடிக்கு 36 ஆயிரம் கன அடியாக இருந்த போதும், அணையிலிருந்து நொடிக்கு 261 கன அடி மட்டுமே தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

கபினி அணை நிரம்பியதையடுத்து, அணைக்கு வரும் உபரி நீர் 15 ஆயிரம் கன அடி முழுவதுமாக காவிரியில் திறந்துவிடப்படுகிறது.

இதையடுத்து, ஒகேனக்கல் காவிரியில் நொடிக்கு 18 ஆயிரம் கன அடியாக இருந்த நீர்வரத்து ஞாயிற்றுக்கிழமை மாலை நொடிக்கு 20,000 கன அடியாகஅதிகரித்தது.

ஒகேனக்கல் அருவிகளில் அதிகளவில் தண்ணீர் கொட்டுவதால், பெரியபாணி வழியாக பரிசலில் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும், சின்னாற்றிலிருந்து மணல் திட்டு வழியாக கர்நாடக அருவிகளுக்குச் சென்று, மீண்டும் மாமரத்துக்கடவு பரிசல் துறை வரை சென்று திரும்ப பரிசல் ஓட்டிகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

மேட்டூருக்கு நீர்வரத்து அதிகரிப்பு: மேட்டூர் அணைக்கு நீர்வரத்து ஞாயிற்றுக்கிழமை மாலை நொடிக்கு 18,390 கன அடியாக அதிகரித்தது. கடந்த சில நாள்களாக அணைக்கு நீர்வரத்து அதிகரித்து வருவதையடுத்து, கடந்த 26-ஆம் தேதி 74.55 அடியாக இருந்த நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை மாலை 77.74 அடியாக அதிகரித்தது.

கடந்த இரு நாள்களில் மட்டும் அணையின் நீர்மட்டம் 3.19 அடி உயர்ந்துள்ளது.

குடிநீர்த் தேவைக்காக அணையிலிருந்து நொடிக்கு 1000 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. அணையின் நீர் இருப்பு 39.60 டி.எம்.சி.யாக உள்ளது.

**கறவை மாடுகளுக்கு குடற்புழு நீக்க முகாம்**

தருமபுரி ஒன்றியம், நல்லசேனஅள்ளி கிராமத்தில் விலையில்லா கறவைப் பசுக்களுக்கான மலடு நீக்க சிகிச்சை, குடற்புழு நீக்கம் மற்றும் மாதாந்திர கள ஆய்வு முகாம் சனிக்கிழமை நடைபெற்றது.

முகாமைத் தொடக்கி வைத்த மாவட்ட ஆட்சியர் கே.விவேகானந்தன், விலையில்லா கறவைப் பசுக்கள், வெள்ளாடுகள் பெற்ற பயனாளிகளுக்கு தாது உப்புக் கலவை, தீவனப் பயிர் விதைகளை வழங்கினார்.

கால்நடை பராமரிப்புத்துறை துணை இயக்குநர் என்.சீனிவாசன், உதவி இயக்குநர் என்.ஜெகந்நாதன், உதவி மருத்துவர்கள் ரேவதி, ராம்குமார், சரவணசெல்வன், ஊராட்சித் தலைவி சாந்தி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மாவட்டம் முழுவதும் கறவைப் பசுக்கள், வெள்ளாடுகளுக்கான கள ஆய்வு முகாம் நடைபெற்றது.

**வேளாண் பயிற்சி முகாம்**

தருமபுரி லாலாகொட்டாய் கிராமத்தில் வேளாண் தொடர்பான கிராம அளவிலான இரண்டு நாள் பயிற்சி முகாம் அண்மையில் நடைபெற்றது.

மாவட்ட உழவர் பயிற்சி நிலையம் சார்பில் நடைபெற்ற முகாமில் வேளாண் துறைத் திட்டங்கள், மானியம், சொட்டு நீர்ப்பாசனப் பயன்பாடு, ஒருங்கிணைந்த பண்ணையம், திருந்திய நெல் சாகுபடி, துவரை நாற்று நடவு ஆகியவை குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது. இதுதவிர, மானாவாரிப் பயிர்களுக்கு ரசாயன உரமிடுதல், வறட்சிக் காலத்தில் போதிய ஈரப்பதம் இன்மையால் பயிர்கள் காய்ந்து விடுவதைத் தவிர்க்க ஊட்டமேற்றிய தொழு உரம்

தயாரிப்பு, தோட்டக்கலை, கால்நடை உள்ளிட்ட வேளாண் தொடர்புடைய துறைகள் சார்ந்த திட்டங்கள் குறித்து

எடுத்துரைக்கப்பட்டது.உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை அலுவலர் கோ.சங்கீதா, வட்டாரத் தொழில் நுட்ப மேலாளர் மகேஸ்வரி, உதவித் தொழில் நுட்ப மேலாளர் பரமசிவம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**நவீன கரும்பு சாகுபடி தொழில்நுட்பப் பயிற்சி**

கரும்பு உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், கரும்பு விவசாயிகளின் வருவாயை உயர்த்தவும் சேலம் மாவட்டம், சந்தியூரில் உள்ள வேளாண்மை அறிவியல் நிலையத்தில் சேலம். நாமக்கல் மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கு நீடித்த நவீன கரும்பு சாகுபடி குறித்த தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

இதைத்தொடர்ந்து, ஓமலூர் அருகேயுள்ள டேனிஷ்பேட்டை கிராமத்தில் விவசாயிகளுக்கு களப் பயிற்சியும் அளிக்கப்பட்டது. ஒரு பரு கருணை நடவு முறை. சொட்டு நீர் உரப் பாசன முறைகள் குறித்து பயிற்சியளிக்கப்பட்டது.

இதுகுறித்து சந்தியூர் வேளாண்மை அறிவியல் நிலைய ஒருங்கிணைப்பாளர் என்.ஸ்ரீராம் கூறியது:

சேலம், தருமபுரி, நாமக்கல் மாவட்டத்தில் கரும்பு சாகுபடி அக்டோபர் முதல் ஜனவரி வரை நடைபெறுகிறது. பெரும்பாலான விவசாயிகள் 40 டன்கள் மட்டுமே சராசரி மகசூலாக எடுக்கின்றனர். புதிய தொழில்நுட்பத்தின் வாயிலாக விவசாயிகளின் உற்பத்தித் திறன் அதிகரிக்கப்பட்டு அவர்களுக்கு கூடுதல் வருவாய் கிடைத்து வருகிறது. மத்திய அரசின் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் மூலம், வட்டார அளவில் முன்னோடி விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு புதிய தொழில்நுட்பங்கள் குறித்துப் பயிற்சியளிக்கப்படுகிறது என்றார்.

இந்தப் பயிற்சியில் பங்கேற்ற, நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் வட்டாரத்தைச் சேர்ந்த விவசாயி ராஜு, கடந்த 50 ஆண்டுகளாக கரும்பு

பயிரிட்டு வருவதாகவும், புதிய தொழில்நுட்பம் உற்பத்தியைப் பெருக்க உதவுவதாகவும் தெரிவித்தார். உற்பத்தி பெருக்கத்தால், கூடுதல் வருவாய் கிடைப்பது மகிழ்ச்சியளிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

**பயிர்க் காப்பீடு: கணக்கெடுப்பில் விடுபட்டவர்களுக்கு இழப்பீடு கிடைக்குமா?**

புதுக்கோட்டை மாவட்டத்தில் கடந்த 2013-14-ல் வேளாண் காப்பீடு செய்த பகுதிகளில் விடுபட்டுள்ள பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டும் என எதிர்பார்க்கின்றனர்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் சென்ற (2013-14) ஆண்டில் சுமார் 74,262 எக்டேரில் நெல்பயிர் சாகுபடி செய்த விவசாயிகள் 78,320 பேர் பயிர் காப்பீடு செய்தனர். இதன் மூலம் மொத்தம் ரூ. 3.11 கோடி பிரிமியத் தொகையாக செலுத்தப்பட்டது.

அந்த ஆண்டில் பருவமழை ஏமாற்றியதுடன் மின்சாரமும் கைகொடுக்காத காரணத்தால் மாவட்டத்திலுள்ள காவிரி டெல்டா பகுதி உள்பட மாவட்டம் முழுவதும் சாகுபடி முடங்கிப்போனது. இதையடுத்து இழப்பைச் சந்தித்த விவசாயிகள் வேளாண் காப்பீடு நிறுவனம் மூலம் உரிய இழப்பீடு கிடைக்குமென எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

இந்நிலையில் புதுக்கோட்டை மாவட்டத்துக்கு வேளாண் காப்பீடுக்கான இழப்பீட்டுத் தொகை ரூ. 118 கோடி ஒதுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட நிர்வாகம் அறிவித்தது.

இதன்பின்னர் மாவட்டத்தில் வேளாண் காப்பீடு செய்த 44 பிர்காக்களில் மணமேல்குடியில் 91.13, கோட்டைப்பட்டினத்தில் 91.43, ஏம்பலில் 63.65, அத்தாணி பகுதியில் 62, அரசமலையில் 14.59, நார்த்தாமலையில் 25.78, அரசர்குளத்தில் 32.85, திருமயத்தில் 9.63, விராலிமலையில் 12.26, கீழாநிலையில் 9.76, நாகுடியில் 41.26, சித்தன்னவாசலில் 50.28, சிலட்டூரில் 71.10, செங்கீரையில் 25.52, சிங்கவனத்தில் 59.72, அறந்தாங்கியில் 88.81, பொன்பேத்தியில் 71.89, மீமிசலில் 91.32, ஆவுடையார்கோவிலில் 67.19, பெருமருதூரில் 76.87 என்ற

சதவிகிதத்தில் 20 பிர்காக்கள் பாதிக்கப்பட்டதாக புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட பகுதியைச் சேர்ந்த விவசாயிகளுக்கு மட்டும் காப்பீடு நிறுவனம் வழங்கிய ரூ. 118 கோடி இழப்பீட்டு தொகை அந்தந்த கூட்டுறவு சங்கங்கள் மூலம் தற்போது வழங்கப்பட்டு வருகிறது.

ஆனால், பாதிக்கப்பட்டிருந்தும் கணக்கெடுப்பில் விடுபட்டுள்ள மீதமுள்ள 24 பிர்காக்களைச் சேர்ந்த விவசாயிகள் தங்களுக்கும் இழப்பீடு வழங்க வேண்டுமென வலியுறுத்தி பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதுகுறித்து விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர் மு. மாதவன் கூறியது:

இழப்பீடு வழங்கும் பகுதிகளில் நிலமில்லாதவர்கள் போலியாக ஆவணங்கள் தயாரித்தும், ஒரு நிலத்துக்கான ஆவணங்களை வெவ்வேறு கூட்டுறவு சங்கங்களில் பதிந்து காப்பீடு செய்த விவசாயிகளுக்கும் உரிய விசாரணை இன்றி பல லட்சம் ரூபாய் இழப்பீடு வழங்கப்படுவதாகத் தெரியவருகிறது.

தீயத்தூர், அடம்பூர் உள்ளிட்ட கூட்டுறவு சங்கங்களில் இழப்பீட்டு தொகை எவ்வளவு வந்துள்ளது என்ற விவரத்தை விவசாயிகளிடம் தெரிவிக்காமல் குறைந்த அளவு இழப்பீட்டு தொகை வழங்கப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது. இதேபோல போலி ஆவணங்கள் மூலம் காப்பீடு செய்தோருக்கு இழப்பீடு வழங்கக்கூடாது. இழப்பீட்டு தொகை வழங்குவதில் வெளிப்படைத்தன்மை தேவை என்றார்.

இதுகுறித்து ஆட்சியர் சு. கணேஷ் கூறியது:

உரியவர்களுக்கு மட்டுமே இழப்பீடுத்தொகை கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும். விடுபட்ட பகுதிகளுக்கு இழப்பீடு வழங்குவது குறித்து வேளாண் காப்பீடு நிறுவனத்துக்கு மாவட்ட நிர்வாகம் அறிக்கை அனுப்பியுள்ளதாக தெரிவித்தார்.

இதுகுறித்து மண்டல கூட்டுறவு இணைப் பதிவாளர் கே.வி.எஸ். குமார் கூறியதாவது:

புதுக்கோட்டை மாவட்டத்தில் 20 பிர்காக்களில் சேதம் கண்டறியப்பட்டுள்ளது. இதன்மூலம் இந்த பிர்காக்களில் உள்ள சுமார் 30

முதல் 35 ஆயிரம் விவசாயிகள் பயன்பெறுவர். பாதிப்புகளில் 25 சதம் தொடங்கி 90 சதவிகிதம் வரை கணக்கிடப்பட்டுள்ளது என்றார்.

**ஜுலை 1 முதல் பயிர்க்கடன் முகாம்: ஆட்சியர்**

பெரம்பலூர் மாவட்டத்தில் வங்கிகள் மூலம் பயிர்க்கடன் வழங்குவதற்கான சிறப்பு முகாம் ஜுலை 1 முதல் 21 ஆம் தேதி வரை சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்தில் நடைபெற உள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் (பொ) ப. மதுசூதன் ரெட்டி.

இதுகுறித்து அவர் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு:

2015 - 2016 ஆம் ஆண்டிற்கான பயிர்க்கடன் வழங்கப்பட உள்ளது.

இதுவரை பயிர்க்கடன் பெறாத விவசாயிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். மேலும், பயிர்க்கடன் பெற விரும்பும் விவசாயிகள் அண்மையில் பெற்ற கணினி சிட்டா, அடங்கல், குடும்ப அட்டை நகல், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலிருந்து பெறப்பட்ட தடையின்மை சான்று, பாஸ்போட் அளவு புகைப்படம் 2, வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அட்டை ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றின் இரு நகல்களுடன் முகாமில் கலந்து கொள்ளலாம்.

வரும் ஜூலை 1-ல் எசனை, அலங்கிழி, குரும்பலூர், சு.ஆடுதுறை, நாரணமங்கலம், உடும்பியம், வாலிகண்டாபுரம் ஆகிய கிராமங்களிலும், 2 ஆம் தேதி குரும்பலூர், ஓலைப்பாடி , அழகிரிபாளையம், காரை, பூலாம்பாடி, நூத்தப்பூர் ஆகியவற்றிலும், 3 ஆம் தேதி அயிலூர், பென்னகோணம், பரவாய், தொண்டபாடி,காரை (மே), பூலாம்பாடி(மே),பசும்பலூர்(வ) ஆகிய கிராமங்களிலும் முகாம் நடைபெற உள்ளது.

தொடர்ந்து, 6 ஆம் தேதி புதுநடுவலூர், ஆண்டிக்குரும்பலூர், சிறுகன்பூர், ஆதனூர், பசும்பலூர், மேட்டுப்பாளையம், வெங்கனூர், 7 ஆம் தேதி லாடபுரம், துறைமங்கலம், சிறுமத்தூர், இரூர்,

கை.களத்தூர்,மேட்டுப்பாளையம்(தெ), தழுதாழை ஆகிய கிராமங்களிலும் முகாம் நடைபெற உள்ளது.

எனவே, விவசாயிகள் தங்களது பகுதிகளில் நடைபெறும் பயிர்க்கடன் முகாமில் பங்கேற்று பயனடையுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**950 டன் சன்னரக நெல் அரைவைக்காக திருப்பூருக்கு அனுப்பிவைப்பு**

நீடாமங்கலத்திலிருந்து 950 டன் சன்னரக நெல் அரைவைப் பணிக்காக திருப்பூருக்கு சனிக்கிழமை அனுப்பி வைக்கப்பட்டது.

திறந்தவெளி சேமிப்பு மையங்கள் ஆதனூர், மூவாநல்லூர், அசேஷம், தலையாமங்கலம், துளசேந்திரபுரம் மற்றும் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களிலிருந்து 75 லாரிகளில் சன்னரக நெல் நீடாமங்கலம் ரயில் நிலையத்திற்கு சனிக்கிழமையன்று கொண்டு வரப்பட்டது. பின்னர் சரக்கு ரயிலின் 21 பெட்டிகளில் நெல் மூட்டைகள் ஏற்றப்பட்டு அரைவைக்காக திருப்பூருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**விலை உயர்வை கட்டுப்படுத்த வெளிநாடுகளில் இருந்து வெங்காயம் இறக்குமதி மத்திய அரசு நடவடிக்கை**



புதுடெல்லி

வெங்காய விலையை கட்டுப்படுத்துவதற்காக வெளிநாடுகளில் இருந்து வெங்காயத்தை இறக்குமதி செய்ய மத்திய அரசு பரிசீலித்து வருகிறது.

<u>வெங்காய தட்டுப்பாடு</u>

இந்தியாவில் வெங்காயம் சாகுபடி செய்யப்படும் மராட்டியம், குஜராத் உள்ளிட்ட மாநிலங்களில் கடந்த மார்ச் தொடக்கத்தில் பெய்த பருவம் தவறிய மழையால் பயிர்களுக்கு பெருத்த சேதம் ஏற்பட்டது. இதில் ரபி பருவ வெங்காய சாகுபடி கடுமையாக பாதிக்கப்பட்டது.

இதனால் தரமிக்க வெங்காயத்துக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டு உள்ளது. இந்த மாநிலங்களில் உள்ள குடோன்களில் சேகரித்து வைக்கப்பட்டிருக்கும் வெங்காயமும் கூட சேதமடைந்து காணப்படுகிறது.

<u>விலை உயர்வு</u>

இவ்வாறு சந்தைகளில் வெங்காய வரத்து குறைந்துள்ளதால், பெருநகரங்களில் வெங்காயத்தின் சில்லறை விலை 40 சதவீதம் வரை உயர்ந்துள்ளது. அந்தவகையில் டெல்லியில் ஒரு கிலோ வெங்காயத்தின்

விலை ரூ.34 ஆக உள்ளது. இது கடந்த ஆண்டு இதே காலக்கட்டத்தில் ரூ.24 ஆகவே இருந்து வந்தது.

இதைப்போல வெங்காயத்தின் மொத்த விலையும் கடந்த ஒரு மாதமாக அதிகரிக்க தொடங்கி உள்ளது. ஆசியாவின் மிகப்பெரிய வெங்காய சந்தையான மராட்டிய மாநிலம் லசல்கோன் சந்தையில், ஒரு கிலோ வெங்காயத்தின் விலை ரூ.11–லிருந்து, ரூ.17 வரை உயர்ந்து உள்ளது.

<u>ஏற்றுமதி விலை அதிகரிப்பு</u>

நாட்டின் தற்போதைய வெங்காய தட்டுப்பாடு, வருகிற காரிப் பருவம் வரை, அதாவது செப்டம்பர் மாதம் வரை தொடரும் என வேளாண் வல்லுனர்கள் எச்சரித்து உள்ளனர். இதனால் வெங்காய விலை தொடர்ந்து அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டு உள்ளது.

எனவே இந்த விலை உயர்வை கட்டுப்படுத்த மத்திய அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. அதன்படி உள்நாட்டு வினியோகத்தை ஊக்குவிக்கும் வகையில், வெங்காய ஏற்றுமதி விலையை கடந்த வாரம் அதிகரித்து உத்தரவு பிறப்பித்தது.

<u>அரசுக்கு பரிந்துரை</u>

இந்த நிலையில் மத்திய அரசின் செயலாளர்கள் மட்டத்திலான ஆலோசனை கூட்டம் கடந்த வாரம் நடந்தது. இந்த கூட்டத்தில், அத்தியாவசியப் பொருட்களுக்கான தேவைகள் மற்றும் விலைகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

இந்த குழு, உள்நாட்டில் வெங்காய விலையை கட்டுக்குள் வைத்திருப்பதற்காக, வெங்காய இறக்குமதிக்கான சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்யுமாறு மத்திய வர்த்தக அமைச்சகத்துக்கு பரிந்துரைத்தது. அதன்படி வெங்காய இறக்குமதிக்கான நடவடிக்கைகளை மத்திய அரசு பரிசீலித்து வருகிறது.

<u>உளுந்தம் பருப்பு இறக்குமதி</u>

மேலும் உளுந்தம் பருப்பின் விலையையும் கட்டுக்குள் கொண்டு வருவதற்காக, மத்திய அரசுக்கு சொந்தமான நிறுவனங்கள் மூலம் உளுந்தம் பருப்பு இறக்குமதி செய்யவும் இந்த குழு பரிந்துரைத்தது.

அதன்படி 5 ஆயிரம் டன் உளுந்தம் பருப்பை இறக்குமதி செய்வதற்கான டெண்டரை, இந்தியாவின் சர்வதேச வர்த்தக நிறுவனமான எம்.எம்.டி.சி. விரைவில் வெளியிடுகிறது. முன்னதாக இந்த நிறுவனம் மூலம் 5 ஆயிரம் டன் துவரம் பருப்பு இறக்குமதிக்கான டெண்டரும் விடப்பட்டு இருந்தது குறிப்பிடத்தக்கது.

**மழையின் காரணமாக பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு வாழைத்தார் வரத்து குறைந்தது**



பொள்ளாச்சி,

மழையின் காரணமாக பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு வாழைத்தார் வரத்து குறைந்தது.

வாழைத்தார் ஏலம்

பொள்ளாச்சி மார்க்கெட்டில் வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமை மற்றும் வியாழக்கிழமைகளில் வாழைத்தார் ஏலம் நடைபெற்று வருகிறது.

**கால்நடை பாதுகாப்பு திட்ட மருத்துவ முகாம் கலெக்டர் விவேகானந்தன் தொடங்கி வைத்தார்**



நல்லசேனஅள்ளி கிராமத்தில் கால்நடை பாதுகாப்பு திட்ட மருத்துவ முகாமை கலெக்டர் விவேகானந்தன் தொடங்கி வைத்தார்.

விலையில்லா ஆடுகள்

தமிழக முதல்-அமைச்சரின் விலையில்லா கறவைப் பசுக்கள் மற்றும் ஆடுகள் வழங்கும் திட்டத்தின்கீழ் தர்மபுரி மாவட்டத்தில் கடந்த 4 ஆண்டுகளில் 12 கிராமங்களில் 600 பயனாளிகளுக்கு கறவைப்பசுக்கள் ரூ.2 கோடியே 16 லட்சம் மதிப்பில் வழங்கப்பட்டுள்ளது. அவற்றின் மூலம் இதுவரை 644 கன்றுகள் பிறந்துள்ளது. இதேபோன்று மாவட்டத்தில் கடந்த 4 ஆண்டுகளில் 201 கிராமங்களில் 16 ஆயிரத்து 965 பயனாளிகளுக்கு தலா 4 ஆடுகள் வீதம் 67 ஆயிரத்து 860 ஆடுகள் ரூ.21 கோடியே 62 லட்சம் மதிப்பில் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அவற்றின் மூலம் இதுவரை 1 லட்சத்து 1,187 ஆட்டுக்குட்டிகள் பிறந்துள்ளன.

இந்த திட்டத்தில் தர்மபுரி மாவட்டத்தில் ஜூன் 2014 முதல் மே 2015 வரை வழங்கப்பட்ட விலையில்லா ஆடுகள் மற்றும் 4 ஆண்டுகளாக வழங்கப்பட்ட விலையில்லா கறவைப் பசுக்களுக்கான மாதாந்திர கள ஆய்வு முகாம் நேற்று மாவட்டம் முழுவதும் நடைபெற்றது. தர்மபுரி ஒன்றியம் நல்லசேனஅள்ளி கிராமத்தில் வழங்கப்பட்ட 50 கறவை மாடுகள் மற்றும் 31 பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட வெள்ளாடுகள்,

செம்மறியாடுகளுக்கு கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் கால்நடை பாதுகாப்பு திட்ட மருத்துவ முகாம் மற்றும் மாதாந்திர கள ஆய்வு நேற்று நடைபெற்றது. கலெக்டர் பாராட்டு

இந்த முகாமை கலெக்டர் விவேகானந்தன் தொடங்கி வைத்து, கால்நடைகளுக்கு அளிக்கப்படும் மருத்துவ பணிகள் குறித்து ஆய்வு செய்தார். பின்னர் முகாமில் கலந்து கொண்ட பயனாளிகளுக்கு தாது உப்பு கலவை பாக்கெட்டுகள் மற்றும் தீவன பயிர் விதைகளை வழங்கினார். தமிழக முதல்-அமைச்சரின் விலையில்லா செம்மறியாடுகள், வெள்ளாடுகள் வழங்கும் திட்டத்தின்கீழ் தின்னஅள்ளி கிராமத்தை சேர்ந்த சாந்தா என்பவருக்கு கடந்த 2012 ஜூன் மாதம் வழங்கப்பட்ட 4 வெள்ளாடுகள், 34 குட்டிகளை ஈன்று தற்போது 38 ஆடுகள் கொண்ட பட்டியாக உருவாகியுள்ளதை பார்வையிட்டு கலெக்டர் பாராட்டினார்.

இந்த முகாமில் மொத்தம் 125 பசுக்கள் மற்றும் 422 ஆடுகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. இதில் கால்நடை பராமரிப்புத்துறை துணை இயக்குனர் டாக்டர் சீனிவாசன், உதவி இயக்குநர்கள் ஜெகநாதன், இளங்கோவன், கால்நடை உதவி மருத்துவர்கள் ரேவதி, ராம்குமார், சரவணசெல்வன், தசரதன், ஜெயந்தி,பொற்செழியன், ஊராட்சி மன்ற தலைவர் சாந்தி மற்றும் கால்நடை ஆய்வாளர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

ஏலத்துக்கு பொள்ளாச்சி, ஆனைமலை உள்பட பல்வேறு பகுதிகளில் இருந்து விவசாயிகள் வாழைத்தார்களை விற்பனைக்கு கொண்டு வருகிறார்கள். இதனை உள்ளூர், வெளியூர் வியாபாரிகள் ஏலம் மூலம் வாங்கி செல்கிறார்கள்.

இந்த நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் வாழைத்தார் ஏலம் நடைபெற்றது. ஏலத்துக்கு மோரிஸ், பூவந்தார், செவ்வாழை உள்பட பல்வேறு வாழைத்தார்கள் என 1000 வாழைத்தார்கள் விற்பனைக்கு வந்தன.

இதில் பூவந்தார் ஒன்று ரூ.100 முதல் ரூ.400 வரையும், கற்பூரவள்ளி ரூ.150 முதல் ரூ.450 வரையும், செவ்வாழை ரூ.200 முதல் ரூ.300 வரையும், மோரீஸ் ரூ.100 முதல் ரூ.150 வரையும், நேந்திரம் ஒரு கிலோ

ரூ.27-க்கும், கதளி ரூ.22-க்கும் விற்பனையானது.
வரத்து குறைவு
இது குறித்து மொத்த வியாபாரி ஒருவர் கூறியதாவது:-

பொள்ளாச்சி மார்க்கெட்டில் நடைபெறும் ஏலத்துக்கு 1500 வாழைத்தார்கள் வரும். ஆனால் நேற்று நடந்த ஏலத்துக்கு 1000 தார்கள் தான் வந்தன. மழையின் காரணமாக வாழைத்தார் வரத்து குறைவாக இருந்தது. ஆனாலும் விலையில் பெரிய அளவில் மாற்றம் ஏற்பட வில்லை. பொள்ளாச்சி பகுதியில் தொடர் மழையின் காரணமாக வாழைப்பழங்களின் விற்பனை குறைந்துள்ளது. இதனால் வரத்து குறைவாக இருந்தபோதிலும் விலை உயரவில்லை.
இவ்வாறு அவர் கூறினார்.

**திருமருகல் பகுதியில் குறுவை சாகுபடி பணிகள் மும்முரம்**

திருமருகல் ஒன்றியத்தில் குறுவை சாகுபடி பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகிறது. ஆண்டு தோறும் மேட்டூர் அணை விவசாயத்திற்காக ஜூன் 12-ந்தேதி திறப்பது வழக்கம். ஆனால் இந்த ஆண்டு தண்ணீர் போதிய அளவு இல்லாததால் அணை இதுவரை திறக்கவில்லை. இதையடுத்து தமிழக அரசு விவசாயிகள் மோட்டார் தண்ணீர் மூலம் விவசாயம் செய்ய இலவச மும்முனை மின்சாரத்தை பயன்படுத்தி கொள்ளலாம் என அறிவித்தது. அதன்படி திருமருகல் ஒன்றியத்தில் திருமருகல், திருச்சங்காட்டன்குடி, போலகம், கரையிருப்பு, திருப்புகளூர் ஆகிய பகுதிகளில் சுமார் 2 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் குறுவை சாகுபடி பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகிறது.

**முட்டை விலை ஒரே நாளில் 45 காசுகள் சரிவு 360 காசுகளாக நிர்ணயம்**



நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள் முதல் விலை 45 காசுகள் குறைக்கப்பட்டு, 360 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது. 45 காசுகள் சரிவு நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை 405 காசுகளாக இருந்து வந்தது. இந்த நிலையில் நேற்று நாமக்கல்லில் நடந்த தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் முட்டை விலையை அதிரடியாக 45 காசுகள் குறைக்க முடிவு செய்தனர். எனவே முட்டை கொள்முதல் விலை 360 காசுகளாக சரிவடைந்து உள்ளது.

பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) வருமாறு:- சென்னை-427, ஐதராபாத்-370, விஜயவாடா, தனுகு-353, பார்வாலா-325, மும்பை-410, மைசூர்-426, பெங்களூரு-415, கொல்கத்தா-380, டெல்லி-340.

முட்டைக்கோழி கிலோ ரூ. 69-க்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது. நேற்று நடந்த கூட்டத்தில் கிலோவுக்கு ரூ.4 குறைக்க முடிவு செய்தனர். எனவே முட்டைக்கோழி விலை கிலோ ரூ.65 ஆக சரிவடைந்து உள்ளது. கறிக்கோழி கிலோ ரூ.87-க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அதன் விலையில் மாற்றம் செய்யப்படவில்லை.

காரணம் என்ன?

ரம்ஜான் நோன்பு தொடங்கி உள்ளதால் தமிழகம் மற்றும் கேரளாவில் முட்டை விற்பனை மந்தமாகி உள்ளது. இதேபோல் முட்டையின்

கொள்முதல் விலை அதிகரித்ததால், அதன் சில்லறை விற்பனை குறைய தொடங்கி உள்ளது. எனவே சில்லறை விற்பனையை அதிகரிக்க விலை குறைக்கப்பட்டு இருப்பதாக கூறப்படுகிறது. மேலும் பிற மண்டலங்களில் முட்டை சரிவடைந்து வருவதும் விலை குறைப்புக்கு முக்கிய காரணமாக கருதப்படுகிறது.

இந்த விலை குறைப்பு குறித்து தமிழ்நாடு முட்டை கோழி பண்ணையாளர்கள் சம்மேளனத்தின் துணை தலைவர் வாங்கிலி சுப்பிரமணியம் கூறியதாவது:- நாமக்கல் மண்டலத்தில் இருந்து நாள் ஒன்றுக்கு சென்னை, பெங்களூர் போன்ற பகுதிகளுக்கு ஏறத்தாழ 80 லட்சம் முட்டைகள் விற்பனைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. ஐதராபாத் மற்றும் பார்வாலா மண்டலங்களில் முட்டை விலை குறைக்கப்பட்டதால், சென்னை மற்றும் பெங்களூர் பகுதியை சேர்ந்த வியாபாரிகள் ஐதராபாத்தில் முட்டை வாங்க தொடங்கினர். நேரடி விற்பனை எனவே ஐதராபாத் மற்றும் பார்வாலா மண்டலங்களை பொறுத்து நாமக்கல் மண்டலத்திலும் முட்டை விலை அதிரடியாக குறைக்கப்பட்டு உள்ளது. நாமக்கல் மண்டலத்தில் இந்த ஆண்டு தொடக்கம் வரை தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு நிர்ணயம் செய்யும் விலைக்கே முட்டை விற்பனை செய்யப்பட்டு வந்தது. ஆனால் அதன் பிறகு கொஞ்சம், கொஞ்சமாக மைனஸ் விலை அதிகரிக்க தொடங்கியது.

எனவே நாங்கள் ஒவ்வொரு நாளும் பண்ணையாளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஒவ்வொரு பண்ணையிலும் வியாபாரிகள் வாங்கும் “லிப்டிங் ரேட்டை” தெரிவித்து வருகிறோம். அது தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு நிர்ணயம் செய்யும் விலைக்கு மாற்றாக அறிவிக்கப்படும் விலை இல்லை. சில்லறை விற்பனையை அதிகரிக்க பண்ணையாளர்களே நேரடியாக விற்பனை செய்யும் மையத்தை புதுச்சேரியில் தொடங்கி உள்ளோம். விரைவில் தாம்பரத்தில் தொடங்க உள்ளோம். இவ்வாறு அவர் கூறினார்.

**மசினகுடி வனப்பகுதியில் புற்களுக்கு பதிலாக அசுர வேகத்தில் வளரும் பார்த்தீனியம் செடிகள் வன விலங்குகளுக்கு உணவு பற்றாக்குறை ஏற்படும் அபாயம்**



மசினகுடி வனப்பகுதியில் புற்களை வளர்க்கும் வனத்துறையினர் முயற்சியில் புற்களுக்கு பதிலாக அதிளவு பார்த்தீனியம் செடிகள் வளர்ந்து உள்ளதால் வன விலங்குகளுக்கு உணவு பற்றாக்குறை ஏற்படும் அபாயம் ஏற்பட்டு உள்ளது.

<u>60 சதவீதம் வனப்பகுதி</u>

நீலகிரி மாவட்டம் 60 சதவீதம் வனப்பகுதிகளை கொண்டு உள்ளது. இதில் முக்கிய வனப்பகுதிகளாக முதுமலை புலிகள் காப்பகமும், நீலகிரி வடக்கு வனக்கோட்டமும் உள்ளன. இந்த வனப்பகுதிகளில் காட்டு யானைகள், புலிகள், காட்டெருமைகள், கழுதைப்புலிகள், செந்நாய்கள் உள்பட ஏராளமான வனவிலங்குகள் வாழ்ந்து வருகின்றன.

மிகவும் பாதுகாக்கப்பட்ட இந்த வனப்பகுதிகளில் வனவிலங்குகளுக்கு தேவையான பல்வேறு மேம்பாட்டு பணிகளை வனத்துறையினர் மேற்கொள்ளப்பட்டு வருகின்றனர். இதற்காக ஒவ்வொரு ஆண்டும் பல கோடி நிதியும் ஒதுக்கப்பட்டு வருகிறது.

<u>புதிய முயற்சி</u>

இந்த நிதியை வைத்து முதுமலை புலிகள் காப்பகத்திலும், நீலகிரி வடக்கு வனக்கோட்டத்திற்குட்பட்ட சிங்காரா, சீகூர் வனப்பகுதிகளிலும்

தடுப்பணைகள், கசிவு நீர் குட்டைகள், களைச்செடிகளை அகற்றுதல் உள்பட பல்வேறு மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஒருசில நேரங்களில் காட்டெருமைகள், மான்கள் உள்ளிட்ட தாவர உண்ணி விலங்குகள் உணவு தேடி குடியிருப்பு பகுதிகள் மற்றும் விவசாய நிலங்களுக்குள் புகுந்து விடுகிறது. இதனை தடுக்க வனப்பகுதியில் புற்களை வளர்க்கும் புதிய முயற்சி கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்டது.

<u>புல் விதை விதைப்பு</u>

இதன்படி வனப்பகுதியில் குறிப்பிட்ட ஏக்கர் நிலங்கள் நன்கு உழுது, அதில் ஸ்டைலோ சேன்டஸ் செமட்டா மற்றும் சிங்க்ரஸ் சிலேரியஸ் என்றழைக்கப்படும் புற்களின் விதைகள் விதைக்கப்பட்டன. இந்த பணியினை வனத்துறையினர் கடந்த சில ஆண்டுகளாக மேற்கொண்டு வருகின்றனர். இந்த புற்கள் காட்டு யானை, மான், காட்டெருமை உள்ளிட்ட தாவர உண்ணிகளுக்கு பிடித்தமான புல் ஆகும்.

இந்த திட்டத்தின் மூலம் தற்போது சீகூர், சிங்காரா வனப்பகுதிகளில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கர் நிலத்தை உழுது அதில் புல் விதைகள் விதைக்கப்பட்டு உள்ளன. இதற்காக ஒவ்வொரு ஆண்டும் சில லட்சம் ரூபாய் நிதியும் ஒதுக்கப்படுகிறது.

<u>பார்த்தீனியம் செடிகள்</u>

இவ்வாறு சிங்காரா, சீகூர் வனப்பகுதிகளில் புல் விதைகள் விதைக்கப்பட்டு உள்ள இடங்களில் புற்கள் முளைப்பதற்கு பதிலாக அந்த இடங்களில் பார்த்தீனியம் என்ற விஷ செடிகள் மட்டுமே அசூர வேகத்தில் செழிப்பாக வளர்ந்து உள்ளன. இதனால் புற்கள் இருந்த இடங்கள் எல்லாம் தற்போது பார்த்தீனியம் செடிகள் காடுகளாக காட்சியளிக்க தொடங்கி உள்ளது.

இதன் காரணமாக வனவிலங்குகளுக்கு பசுந்தீவன தட்டுப்பாடு ஏற்பட்டு உள்ளது. வனத்துறையின் இந்த திட்டத்தினால் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கடும் அதிருப்தி அடைந்து உள்ளனர். இது குறித்து சமூக ஆர்வலர்கள் கூறியதாவது:–

சிங்காரா, சீகூர் வனப்பகுதிகளில் புல்வெளிகள் அதிகமாக உள்ளது. இந்த புல்வெளிகளில் வனவிலங்குகளுக்கு தேவையான புற்களும் அதிகமாக காணப்படுகிறது. இந்த நிலையில் புல்விதைகளை

விதைப்பதாக கூறி வனப்பகுதிகளை உழுது புல்விதைகளை வனத்துறையினர் விதைத்து வருகின்றனர்.

ஆனால், புல் விதைகளை விதைத்த இடங்களில் புற்களுக்கு பதிலாக பார்த்தீனியம் செடிகள் அசுர வேகத்தில் பரவி வருகின்றன. இது வருத்தமளிக்கிறது. இத்திட்டத்தினால் பார்த்தீனியம் செடிகளே இல்லாமல் இருந்த சிங்காரா, சீகூர் வனப்பகுதிகள் தற்போது பார்த்தீனியம் காடுகளாக மாறி வருகின்றன. எனவே இத்திட்டத்தை வனத்துறையினர் கைவிட வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

## நீர்வரத்து தொடர்ந்து அதிகரிப்பு: மேட்டூர் அணை நீர்மட்டம் மேலும் 2 அடி உயர்வு கிறிஸ்தவ ஆலய கோபுரம் தண்ணீரில் மூழ்கியது



மேட்டூர் அணைக்கு நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்து வருவதால், மேட்டூர் அணை நீர்மட்டம் மேலும் 2 அடி உயர்ந்துள்ளது. இதன் காரணமாக அணை நீர்த்தேக்க பகுதியில் வெளியே தெரிந்து வந்த கிறிஸ்தவ ஆலய கோபுரம் தண்ணீரில் மூழ்கியது.

நீர்வரத்து அதிகரிப்பு

கர்நாடக மாநில அணைகளில் இருந்து திறந்து விடப்பட்ட தண்ணீர் மேட்டூர் அணைக்கு கடந்த 2 நாட்களுக்கு முன்பு வந்தடைந்தது. இதன்காரணமாக, மேட்டூர் அணையின் நீர்மட்டம் நாள்தோறும்

படிப்படியாக அதிகரித்து வருகிறது. இதன்அடிப்படையில் நேற்று முன்தினம் 75.68 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம், நேற்று காலையில் 77 அடியாக உயர்ந்தது. பிற்பகலுக்கு மேல் அணைக்கு நீர்வரத்து அதிகரித்ததால் அணையின் நீர்மட்டம் நேற்று இரவு 78 அடியை தொட்டது.

இதன் காரணமாக நேற்று ஒரே நாளில் அணையின் நீர்மட்டம் 2 அடி உயர்ந்துள்ளது. இந்த நிலையில் கர்நாடக அணைகளில் இருந்து திறந்துவிடப்படும் தண்ணீரின் அளவு மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த தண்ணீர் மேட்டூர் அணையை வந்தடையும் போது, அணையின் நீர்மட்டம் வேகமாக உயர வாய்ப்பு உள்ளது.

நேற்று நிலவரப்படி அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 18 ஆயிரத்து 500 கனஅடியாக அதிகரித்து இருந்தது. இரவில் இந்த அளவு மேலும் அதிகரித்தது குறிப்பிடத்தக்கது. அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக வினாடிக்கு 1000 கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

கிறிஸ்தவ கோபுரம்

மேட்டூர் அணையின் நீர்மட்டம் சரியும் போதெல்லாம் மேட்டூர் அணையின் நீர்த்தேக்க பகுதியான பண்ணவாடியில் இரட்டை கிறிஸ்தவ ஆலய கோபுரங்கள், நந்தி சிலை, ஜலகண்டேஸ்வரர் கோவில் போன்ற புராதன சின்னங்கள் வெளியே தெரிவது வழக்கம். இதைப்பார்ப்பதற்காக தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் சுற்றுலா பயணிகள் வருவார்கள்.

இந்த ஆண்டு மேட்டூர் அணையின் நீர்மட்டம் 79 அடியாக சரிந்த போது, அணையின் நீர்த்தேக்க பகுதியான பண்ணவாடியில் தண்ணீரில் மூழ்கி இருந்த இரட்டை கிறிஸ்தவ கோபுரம் வெளியே தெரிந்தது. இதைத்தொடர்ந்து 2 மாதங்களுக்கு வெளியே தெரிந்த இரட்டை கிறிஸ்தவ கோபுரங்களில் ஒன்று மாயமானது. இந்த இரட்டை

கோபுரங்களில் ஒரு கோபுரம் சேதம் அடைந்து சரிந்து போனதா? அல்லது மீனவர்களால் வெடி வைத்து தகர்க்கப்பட்டதா? என்பது குறித்து இன்னும் விடை தெரியாத நிலையில், இந்த ஒற்றை கோபுரம் மட்டும் வெளியே தெரிந்து வந்தது.

இந்நிலையில் கர்நாடக மாநிலத்தில் இருந்து வினாடிக்கு 18 ஆயிரத்து 786 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளதால், அணைக்கு வரும் நீரின் அளவு அதிகரித்துள்ளது. இதனால் இதுவரை வெளியே தெரிந்து வந்த ஒற்றை கிறிஸ்தவ கோபுரம் தற்போது முழுவதுமாக தண்ணீரில் மூழ்கி விட்டது.

**திருப்பூர் தென்னம்பாளையம் மார் க்கெட்டில் பச்சை மிளகாய் விலை கடும் உயர்வு**



திருப்பூர் தென்னம்பாளையம் மார்க்கெட்டில் பச்சைமிளகாய் விலை கடுமையாக உயர்ந்து விட்டது.

<u>பச்சை மிளகாய் விலை உயர்வு</u>

திருப்பூர் தென்னம்பாளையம் மார்க்கெட்டுக்கு திருப்பூர் சுற்றுவட்டார கிராமங்கள் மற்றும் வெளியூர்களில் இருந்து அனைத்து வித காய்கறிகள் மற்றும் தக்காளி விற்பனைக்கு வருகிறது. தற்போது தக்காளி உற்பத்தி அதிகரித்துள்ளதால் மார்க்கெட்டுக்கு அதிக அளவில் தக்காளி

விற்பனைக்கு வருகிறது. இதனால் தக்காளி விலை சரிந்துள்ளது. கடந்த வாரம் ரூ.300–க்கு விற்கப்பட்ட 14 கிலோ எடை கொண்ட ஒரு பெட்டி தக்காளியின் விலை நேற்று ரூ.200 ஆக குறைந்து விட்டது.

கடந்த ஒரு மாதமாக பச்சை மிளகாய் உற்பத்தி குறைந்து விட்டதால் ஒட்டன்சத்திரத்தில் இருந்து மட்டுமே பச்சைமிளகாய் விற்பனைக்கு வருகிறது. இதனால் கடந்த வாரம் ரூ.20–க்கு விற்கப்பட்ட ஒரு கிலோ பச்சைமிளகாய் விலை நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டே வந்தது. இந்த நிலையில் நேற்று ஒரு கிலோ பச்சை மிளகாய் விலை ரூ.50 ஆக உயர்ந்து விட்டது.

<u>இஞ்சி–புதினா</u>

அதே போல ரூ.60–க்கு விற்கப்பட்ட ஒரு கிலோ இஞ்சியின் விலை ரூ.100 ஆக உயர்ந்து விட்டது. ரூ.3–க்கு விற்கப்பட்ட ஒரு கட்டு புதினா ரூ.6–க்கு விற்கப்பட்டது. இது குறித்து வியாபாரிகளிடம் கேட்ட போது, ரம்ஜான் பண்டிகைக்கான நோன்பு தொடங்கி விட்டதால் இஞ்சி, புதினா விற்பனை அதிகரித்து உள்ளது. அதே சமயம் வரத்து குறைவாக உள்ளது. ரம்ஜான் வரை இவற்றின் விலை குறைய வாய்ப்பில்லை என்று தெரிவித்தனர்.

<u>மீன் விற்பனை அமோகம்</u>

திருப்பூர் மீன் மார்க்கெட்டுக்கு நேற்று தமிழ்நாட்டில் இருந்து 30 டன், ஆந்திராவில் இருந்து 20 டன் என்று மொத்தம் 50 டன் மீன் விற்பனைக்கு வந்திருந்தது. வழக்கத்தை விட 10 டன் மீன் குறைவாக வந்திருந்ததால் அனைத்து மீன்களின் விலையும் கடந்த வாரத்தை விட கிலோவுக்கு ரூ.10 முதல் ரூ.20 வரை உயர்ந்திருந்தது. மீன்களின் விலை உயர்ந்திருந்தாலும் விற்பனை அமோகமாக இருந்ததால் அனைத்து மீன்களும் விரைவில் விற்று தீர்ந்து விட்டன.

**தொடர்மழையால் 127 அடியானது நீர்மட்டம் பெரியாறில் இந்த ஆண்டும் 142 அடி**

மதுரை: நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை நீடிப்பதால், பெரியாறு அணையின் நீர்மட்டம் நேற்று மாலை 127 அடியாக உயர்ந்தது. நீர்வரத்து வினாடிக்கு 4,469 கன அடியாக உள்ள நிலையில், அணையில் இம்முறையும் 142 அடி தண்ணீர் தேக்க வாய்ப்பு ஏற்படும் என்ற எதிர்பார்ப்பு விவசாயிகள் மத்தியில் எழுந்துள்ளது. தென்மேற்கு பருவமழை நீடிப்பதால் தமிழகம் முழுவதும் அணைகளின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. பெரியாறு அணை நீர்ப்பிடிப்பு பகுதியில் தொடர்ந்து மழை பெய்வதால் நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்து வருகிறது. நேற்றுமுன்தினம் 125.40 அடியாக இருந்த நீர்மட்டம் நேற்று மாலை 127 அடியை தாண்டியது. வினாடிக்கு 4 ஆயிரத்து 469 கனஅடி நீர்வரத்து உள்ளது. அணையில் இருந்து திறக்கப்படும் தண்ணீரின் அளவு 1000 கன அடியில் இருந்து 1,300 கனஅடியாக உயர்ந்துள்ளது.

பெரியாறு அணை இருபோக பாசன ஆயக்கட்டில், தேனி மாவட்டம் கம்பம் பள்ளத்தாக்கில் 15 ஆயிரம் ஏக்கர் நிலங்களுக்கு முதல்போக பாசனத்திற்காக ஏற்கனவே தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. தற்போது பெரியாறு, வைகை அணைகளில் நீர் இருப்பு 5 ஆயிரத்து 400 மில்லியன் கனஅடியை எட்டியுள்ளது. எனவே, வைகை அணையில் இருந்து மதுரை, திண்டுக்கல் மாவட்டங்களிலுள்ள 45 ஆயிரம் ஏக்கர் பாசனத்திற்கு ஜூலை முதல் வாரம் தண்ணீர் திறக்க வாய்ப்புள்ளது, அதற்கான தேதியை அரசு அறிவிக்கும் என பொதுப்பணித்துறையினர் தெரிவித்துள்ளனர். உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி கடந்த 2014ம் ஆண்டு நவ. 20ம் தேதி வடகிழக்கு பருவமழை சீசனில் பெரியாறு அணையில்

142 அடி தண்ணீர் தேக்கப்பட்டது. வரும் ஆகஸ்ட் வரை தென்மேற்கு பருவமழை சீசன் காலம்.

தற்போது 127 அடி உயர்ந்துள்ள நிலையில் மீண்டுமொரு முறை 142 அடி வரை தேக்க மழை கைகொடுக்குமா என்ற எதிர்பார்ப்பு பொறியாளர்கள், விவசாயிகள் மத்தியில் எழுந்துள்ளது. 117 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி: பெரியாறு அணையிலிருந்து 400 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டபோது லோயர்கேம்ப்பில் 32 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டது. தண்ணீர் திறப்பு 1000 கனஅடியில் இருந்து நேற்று 1300 கனஅடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால் மின் உற்பத்தி மூன்று ஜெனரேட்டர்கள் மூலம் 117 மெகாவாட்டாக உயர்ந்துள்ளது.

**உள்ளூர் சந்தையில் விலையை கட்டுப்படுத்த வெங்காயம் இறக்குமதி**

புதுடெல்லி: உள்ளூர் சந்தையில் வரத்தை அதிகரித்து விலையை கட்டுப்படுத்த, வெங்காயம் இறக்குமதி செய்வதற்கு மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

வெங்காயம் விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. கடந்த ஓராண்டாகவே மெட்ரோ நகரங்களில் வெங்காயத்தின் விலை 40 சதவீதம் உயர்ந்துள்ளது. தலைநகர் டெல்லியில் கடந்த ஆண்டு கிலோ 24க்கு விற்கப்பட்ட வெங்காயம் தற்போது 34ஆக அதிகரித்துள்ளது என நுகர்வோர் விவகாரத்துறை அமைச்சக புள்ளிவிவரம் தெரிவிக்கிறது. கடந்தஒரு மாதத்தில் ஆசியாவின் மிகப்பெரிய வெங்காய சந்தையான மகாராஷ்டிரா லசல்கான் மார்க்கெட்டில் கடந்த மாதம் கிலோ 11க்கு விற்கப்பட்ட வெங்காயம் தற்போது கிலோ 17 வரை அதிகரித்து விட்டது. வெங்காயம் விலை குறித்து செயலாளர் குழுவில் கடந்த வாரம் விவாதிக்கப்பட்டது. இதில், இறக்குமதி செய்ய வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினர். இதன்பிறகு உள்ளூர் சந்தையில் விலையை கட்டுப்படுத்துவதற்காக வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யக்கூடிய சாத்தியக்கூறுகளை ஆராயுமாறு வர்த்தக

அமைச்சகத்துக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது என மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

உள்ளூர் சந்தையில் வெங்காயம் அதிகம் வரத்து இருப்பதை உறுதி செய்யும் மற்றொரு நடவடிக்கையாக, மத்திய அரசு வெங்காய ஏற்றுமதிக்கான குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை டன்னுக்கு 250 அமெரிக்க டாலரில் இருந்து 425 அமெரிக்க டாலராக உயர்த்தி அறிவித்துள்ளது. மகாராஷ்டிர மாநிலம் நாசிக்கை சேர்ந்த வெங்காய வியாபாரி ஒருவர் கூறியதாவது: தரமான வெங்காயம் வரத்து குறைவாகவே உள்ளது. இதன் காரணமாக மொத்த விலை சந்தையிலும், சில்லரை சந்தையிலும் வெங்காயத்தின் விலையை உயர்த்த வேண்டியதாகி விட்டது. அதுமட்டுமின்றி, மகாராஷ்டிரா உட்பட வெங்காயம் அதிகம் உற்பத்தியாகும் பல மாநிலங்களில் இருப்பு வைப்பதற்கு போதுமான வசதி இல்லாததாலும், மழை காரணமாகவும் ஏராளமான வெங்காயங்கள் அழுகி வீணாகி விட்டன. இதுவும் விலை உயர்வுக்கு வழிவகுத்துவிட்டது என்றார்.

**கேரளாவில் பருவமழை தீவிரம் நாளை வரை கனமழை நீடிக்கும்**

திருவனந்தபுரம்: கேரளாவில் பருவமழை தீவிரமடைந்துள்ளது. நாளை (30ம் தேதி) வரை கனமழை நீடிக்கும் என்று திருவனந்தபுரம் வானிலை ஆராய்ச்சி மையம் அறிவித்துள்ளது. கேரளாவில் கடந்த சில தினங்களாக தென்மேற்கு பருவமழையின் தீவிரம் சிறிது குறைந்து காணப்பட்டது. திருவனந்தபுரம், கொல்லம், எர்ணாகுளம், கண்ணூர் உள்ளிட்ட பகுதிகளில் லேசான மழையே பெய்து வந்தது. இந்நிலையில் கடந்த இரு தினங்களாக பரவலாக கனமழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் கோழிக்கோடு மாவட்டம் வடகரையில் அதிகபட்சமாக 16 செ.மீ. மழை பெய்தது. திருவனந்தபுரத்தில் நேற்று முன்தினம் காலை 11 மணியளவில் பெய்யத் தொடங்கிய மழை இரவு வரை நீடித்தது. இதனால் தாழ்வான பகுதிகளில் வெள்ளம் புகுந்தது.

நெய்யாறில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதை தொடர்ந்து நெய்யார்

அணை திறந்து விடப்பட்டுள்ளது. கனமழையால் திருவனந்தபுரம், இடுக்கி, பாலக்காடு உட்பட பல மாவட்டங்களில் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. இடுக்கி மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டதை தொடர்ந்து 100க்கும் மேற்பட்ட ஏக்கர் நிலங்களில் பயிர்கள் நாசமாகியுள்ளன. மழையால் இதுவரை ₹ 80 கோடிக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக வருவாய் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். நாளை (30ம் தேதி) வரை கேரளாவில் பரவலாக அனைத்து பகுதிகளிலும் கனமழை பெய்யும் என்று திருவனந்தபுரம் வானிலை ஆராய்ச்சி மையம் அறிவித்துள்ளது.

**வெங்காயத்துக்கான குறைந்தபட்ச ஏற்றுமதி விலை அதிகரிப்பு**




புதுடெல்லி: வெங்காயத்துக்கான குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை மத்திய அரசு டன்னுக்கு 425 அமெரிக்க டாலராக அதிகரித்துள்ளது. உற்பத்தி குறைவால் சந்தையில் வெங்காயத்துக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் சந்தையில் விலை அதிகரித்து வருகிறது. மகாராஷ்டிராவில் உள்ள லாசல்கான் மொத்தவிலை சந்தையில் ஒரு மாதம் முன்பு கிலோ ரூ.11 ஆக இருந்த வெங்காயம் தற்போது கிலோ ரூ.16 முதல் ரூ.17 வரை அதிகரித்துள்ளது. அத்தியாவசிய பொருளான வெங்காயம் உற்பத்தி ஆண்டுக்கு ஆண்டு குறைந்து வருகிறது. கடந்த 2014-15 (ஜூலை-ஜூன்) ஆண்டில் வெங்காயம் உற்பத்தி 189.23 லட்சம் டன்களாக இருந்தது. இதற்கு முந்தைய ஆண்டில் இது 194 லட்சம் டன்களாக இருந்தது.

தற்போது பருவமழை காரணமாக வெங்காயத்துக்கு பாதிப்பு ஏற்பட வாய்ப்புகள் அதிகம் உள்ளது. இதை கருத்தில் கொண்டு குறைந்த பட்ச ஏற்றுமதி விலையை வெளிநாட்டு வர்த்தக இயக்குனரகம் அதிகரித்து உத்தரவிட்டுள்ளது. உள்ளூரில் வெங்காயம் விலையை கட்டுப்படுத்த அவ்வப்போது குறைந்த பட்ச ஏற்றுமதி விலை நிர்ணயிக்கப்படுவதால் ஏற்றுமதி ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டு, சந்தைகளுக்கு வரத்து அதிகரிக்கிறது. கடந்த 2013-14 ஆண்டில் வெங்காய ஏற்றுமதி 13.58 லட்சம் டன்னாக இருந்தது. இது 2014-15 ஆண்டில் 10.86 லட்சம் டன்களாக குறைந்து விட்டது குறிப்பிடத்தக்கது.

**குன்னூர் ஏல மையத்தில் 85% டீத்தூள் விற்பனை**




குன்னூர்: நீலகிரி மாவட்டம் குன்னூர் டீ டிரேடர்ஸ் அசோசியேசன் (சிடிடிஏ) ஏல மையத்தில் இந்த ஆண்டுக்கான 26வது ஏலம் கடந்த வியாழன், வெள்ளியில் நடந்தது. மொத்தம் 18.83 லட்சம் கிலோ டீத்தூள் விற்பனைக்கு வந்தது. இதில் இலை ரகம் 13.46 லட்சம் கிலோவும், டஸ்ட் ரகம் 5.37 லட்சம் கிலோவும் அடங்கும். இந்த ஏலத்தில் உள்நாடு மற்றும் வெளிநாடு வர்த்தகர்கள் அதிகளவு பங்கேற்றதால் 85 சதவீத தேயிலை தூள் விற்பனையானதுடன், அனைத்து ரகத்துக்கும் கிலோ 2 வரை விலை உயர்ந்தது.

விழுப்புரம் மாவட்டத்தில் இடி, மின்னலுடன் கனமழை

விழுப்புரம், : விழுப்புரம் மாவட்டத்தில், நேற்று இரவு இடி, மின்னலுடன் கனமழை பெய்தது. இதனால் பொதுமக்கள், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

விழுப்புரம் மாவட் டத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக பருவமழையின் அளவு வெகுவாக குறைந்து கடும் வறட்சி ஏற்பட்டுள்ளது. கடந்த மாதம் துவங்கிய கத்திரிவெயில் முடிந்தாலும் அதன் தாக்கம் குறையாமல் 100 டிகிரிக்கும் மேல் வெயில் வாட்டிவதைத்தது. இதனால் பொதுமக்கள் கடும் அவதிப்பட்டு வருகின்றனர். இந்நிலையில், கடந்த இருதினங்களாக வானம் மேகமூட்டத்துடனும், சாரல்மழை பெய்து வருகிறது.

நேற்று இரவு இடி, மின்னலுடன் மழை பெய்தது. சுமார் அரைமணிநேரம் கொட்டி தீர்த்த மழையினால் வெப்பத்தின் பிடியில் தவித்த மக்கள் மகிழ்ச்சியடைந்தனர். மேலும் நகரில் பல்வேறு தாழ்வான பகுதிகளில் மழைநீர் சூழ்ந்துள்ளது. திருச்சி சாலை, புதியபேருந்துநிலையம், விஜிபி நகர், கீழ்பெரும்பாக்கம் தரைப்பாலம

மழையால் விவசாய பயிர் சாகுபடி தீவிரம் மானாவாரியும் உயிர் பெற்றது
கோவை, : கோவை மாவட்டத்தில் மழையால் விவசாய பயிர் சாகுபடி தீவிரமாக நடக்கிறது. விளைச்சல் அதிகரித்தால் காய்கறி விலை குறையும் என வேளாண்துறையினர் கருதுகின்றனர்.கோவை மாவட்டத்தில் 3.73 லட்சம் ஏக்கர் விவசாய நிலப்பரப்பு இருக்கிறது. இதில் 30 ஆயிரம் ஏக்கரில் பயிறு வகைகளும், 50 ஆயிரம் ஏக்கரில் சிறு தானியங்களும், 26 ஆயிரம் ஏக்கரில் எண்ணெய் வித்து பயிர்களும், 45 ஆயிரம் ஏக்கரில் தோட்டக்கலை பயிர்களும் 87 ஆயிரம் ஏக்கரில் தென்னை, 10 ஆயிரம் ஏக்கரில் கரும்பு, பருத்தியும் பயிரிடப்பட்டு வருகிறது.

கடந்த 2013ம் ஆண்டில் கடும் வறட்சி காரணமாக நெல், சோளம், கம்பு, கேழ்வரகு, மக்காசோளம் சாகுபடி பரப்பு 55 சதவீதம் குறைந்தது. கடந்த ஆண்டில் இயல்பான மழையால், விவசாய பயிர் சாகுபடி நடந்தது. நடப்பாண்டில், இயல்பை காட்டிலும் 30 சதவீதம் கூடுதல் மழை

பெய்துள்ளது. குறிப்பாக கடந்த 7 ஆண்டுகளில் கோடை மழை அதிகமாக பெய்தது. தென் மேற்கு பருவ மழையும் ஜூன் மாதத்தின் வழக்கமான அளவை காட்டிலும் 12 சதவீதம் கூடுதலாக பெய்துள்ளது. இதனால் விவசாய பயிர் சாகுபடி வேகமாக நடக்கிறது. நடப்பு மாத நிலவரப்படி நெல், சிறு தானியம், தக்காளி, தோட்டக்கலை பயிர் சாகுபடி முழு அளவில் துவங்கியுள்ளது. மானாவாரி நிலங்களிலும் மழையை நம்பி சோளம் சாகுபடியை துவக்கியுள்ளனர்.

விவசாய பயிர் சாகுபடி இல்லாத நிலங்களிலும் கால்நடை தீவன பயிர் சாகுபடி நடக்கிறது. தொடர் மழையால் விவசாயிகள் வாழை, தென்னை, கரும்பு, பருத்தி, மஞ்சள் சாகுபடி செய்ய விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். கோவை மற்றும் சுற்றுப்பகுதிகளில் ஓரளவு நிலத்தடி நீர்வளம் இருந்ததால் கிணற்று பாசனத்தின் மூலம், வாழை, மஞ்சள், கரும்பு போன்ற பணப்பயிர் மற்றும் காய்கறி உற்பத்தியில் தீவிர கவனம் செலுத்தி வந்தனர். தற்போது நிலத்தடி நீர் மட்டமும் 50 ◌சதவீதம் கூடியுள்ளது.

நடப்பாண்டில் காய்கறி விலை வெகுவாக உயர்ந்து விட்டது. விவசாய பயிர் சாகுபடி பரப்பு அதிகரிப்பு, அதிகளவு பயிர் சாகுபடி, உயர் விளைச்சல் மூலமாக காய்கறி விலை குறையும் வாய்ப்புள்ளது. வேளாண் துறையினர் மூலமாக உரம், அங்கக பொருட்கள், விவசாய பண்ணை கருவிகள், மானிய திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒரிரு மாதத்தில் அனைத்து வகை காய்கறிகள் விலையும் குறைய வாய்ப்புள்ளதாக வேளாண்மை துறையினர் தெரிவித்தனர்.

குறுவை தொகுப்பு திட்டத்தில் நடவு இயந்திரத்துக்கு எதிர்ப்பு விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

வலங்கைமான், : குறுவை தொகுப்பு திட்டத்தில் நடவு இயந்திரம் பயன்படுத்த எதிர்ப்பு தெரிவித்து, வலங்கைமானில் நேற்று விவசாயிகள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். வலங்கைமான் தாலுகா அலுவலகம் எதிரே அகில இந்திய விவசாய தொழிலாளர் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்

நடத்தினர். சங்க செயலாளர் பாலைய்யா, தலைவர் சுப்பிரமணியன் ஆகியோர் தலைமை வகித்தனர். மாவட்ட தலைவர் சாமியய்யா, மார்க்சிஸ்ட் ஒன்றிய செயலாளர் சுப்பிரமணியன், தமிழ்நாடு விவசாயிகள் சங்க ஒன்றிய செயலாளர் ராதா, பால் உற்பத்தியாளர் சங்கம் ஒன்றிய பொறுப்பாளர் நடராஜன் ஆகியோர் பேசினர். முன்னதாக மாரியம்மன் கோயிலிலிருந்து ஊர்வலமாக வந்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.

விவசாய தொழிலாளர்களுக்கு வேலை வாயப்பு அளிக்கும் வகையில் கிளை வாய்க்கால்களை 100 நாள் வேலையில் தூர்வார வேண்டும். 100 நாள் வேலையை 150 நாளாக உயர்த்திட வேண்டும். காவிரி மேலாண்மை வாரியம் மற்றும் காவிரி ஒழுங்காற்று குழுக்களை அமைத்திட வேண்டும். கர்நாடக அரசுடன் பேசி தமிழ்நாட்டுக்கு தேவையான காவிரி நீரை பெற்றுக்கொடுக்க வேண்டும். குறுவை தொகுப்பு திட்டத்தில் நடவு இயந்திரத்தை பயன்படுத்தி பெண் விவசாய தொழிலாளர்களின் வேலைவாய்ப்பை பறிக்கும் முடிவை தமிழக அரசு கைவிட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடந்தது.

திருவாரூர் தாலுகா அலுவலகம் முன்பாக நடந்த ஆர்ப்பாட்டத்துக்கு மாவட்ட துணைத்தலைவர் ஜெயபால் தலைமை வகித்தார். பொருளாளர் மணியன், நகர செயலாளர் சோமசுந்தரம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.இதில் எம்எல்ஏ லாசர் மற்றும் பொறுப்பாளர்கள் மருதையன்,சண்முகம்,கோபிராஜ்,செந்தில்,ராஜாங்கம்,சேகர்,பக்கிரிசாமி, மகாலிங்கம் உட்பட பலர் கலந்து கொண்டனர். அதே கோரிக்கையை வலியுறுத்தி நாகை தாசில்தார் அலுவலகம் முன் எம்.எல்.ஏ. மாலி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடந்தது. விவசாய தொழிலாளர் சங்க ஒன்றிய செயலாளர்கள் ஜீவாராமன், ராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். விவசாய சங்க ஒன்றிய செயலாளர் வடிவேல், மாதர் சங்க ஒன்றிய செயலாளர் தேவிகா, மாவட்ட குழு உறுப்பினர்கள் ராதா, வடிவழகி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

தின பூமி

**நீலகிரி, கோவை மாவட்டங்களில் மேலும் 4 நாட்கள் பலத்த மழை நீடிக்கும்: வானிலை மையம் அறிவிப்பு**




சென்னை, தென்மேற்கு பருவ மழை கர்நாடகம், கேரளா மாநிலங்களில் தீவிரம் அடைந்துள்ளது. அதன் காரணமாக அந்த இரு மாநிலங்களில் ஏராளமான இடங்களில் மழை பெய்து உள்ளது. அதுபோல தமிழ்நாட்டில் மேற்கு தொடர்ச்சி மலையையொட்டிய மாவட்டங்களில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வருகிறது.

குறிப்பாக நீலகிரி மற்றும் கோவை மாவட்டங்களில் மேலும் 4 நாட்கள் கன மழை அல்லது மிக கனமழை பெய்யும் என்று சென்னை மண்டல வானிலை ஆராய்ச்சி அதிகாரிகள் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் காலை 8-30 மணிக்கு முடிவடைந்த 24 மணி நேரத்தில் பெய்த மழை அளவு வருமாறு:-

தேவலா 10 செ.மீ., கூடலூர் பஜார், சின்னக்கல்லார், நடுவட்டம், பெரியார் தலா 5 செ.மீ., குழித்துறை, வால்பாறை, பேச்சிப்பாறை தலா 4

செ.மீ., பாபநாசம், குளச்சல், தக்கலை, பூதப்பாண்டி தலா 3 செ.மீ., கோதையாறு கீழ் அணைக்கட்டு, ராதாபுரம், மைலாடி தலா 2 செ.மீ., நாகர்கோவில், கன்னியாகுமரி, கெய்ட்டி, ஊட்டி, தென்காசி தலா 1 செ.மீ. மழை பெய்துள்ளது.

**கர்நாடக அணைகளில் தண்ணீர் திறப்பு மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு**

மேட்டூர்: காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கடந்த சில நாட்களாக தென்மேற்கு பருவ மழை தீவிரம் அடைந்துள்ளது. இதனால் கர்நாடக மாநிலத்தில் உள்ள கபினி, கிருஷ்ணராஜசாகர் அணைகளுக்கு நீர்வர்தது அதிகரித்துள்ளது. கபினி அணைக்கு வினாடிக்கு 15 ஆயிரத்து 500 கன அடியாக இருந்த நீர்வரத்து 18 ஆயிரத்து 900 கன அடியாக அதிகரித்தது. கிருஷ்ணராஜசாகர் அணைக்கு 25 ஆயிரத்து 800 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. இது தற்போது வினாடிக்கு 29 ஆயிரத்து 500 கன அடியாக அதிரித்துள்ளது. ஹாரங்கி அணைக்கு 2 ஆயிரத்து 755 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. பலத்த மழை காரணமாக கர்நாடக மாநிலத்தில் உள்ள பாகமண்டலாவில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. அங்குள்ள காவிரி கரையோர மக்களுக்கும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து பருவ மழை நீடித்தால் கபினி அணை விரைவில் நிரம்புவதற்கான வாய்ப்பு உள்ளது. நீர்வரத்து அதிகரித்து வருவதால் கபினி அணையில் இருந்து முதல் கட்டமாக வினாடிக்கு 3 ஆயிரம் கன அடி தண்ணீரும், கிருஷ்ணராஜசாகர் அணையில் இருந்து வினாடிக்கு 9 ஆயிரம் கன அடி தண்ணீரும் காவிரியில் திறந்துவிடப்பட்டுள்ளது. இந்த 2 அணைகளில் இருந்தும் திறந்துவிடப்பட்டுள்ள 12 ஆயிரம் கன அடி தண்ணீர் நேரடியாக மேட்டூர் அணைக்கு வரும்.

கபினி அணையில் இருந்து 241 கிலோ மீட்டர் தூரத்திலும், கிருஷ்ணராஜசாகர் அணையில் இருந்து 182 கிலோ மீட்டர் தூரத்திலும் மேட்டூர் அணை உள்ளது. இதனால் காவிரி ஆற்றில் திறந்துவிடப்பட்ட தண்ணீர் ஒகேனக்கல் வழியாக 3 நாட்களில் மேட்டூர் அணைக்கு வரும் வாய்ப்பு உள்ளது. கபினி மற்றும் கே.ஆர்.எஸ். அணைகளில் இருந்து திறக்கப்படும் தண்ணீர் கர்நாடக மாநிலத்தில் உள்ள சங்கமம் என்ற இடத்தில் ஒன்றாக கலக்கிறது. அங்கிருந்து பிலிகுண்டுலு வழியாக தமிழகத்தின் நுழைவு வாயிலான ஒகேனக்கல்லுக்கு வருகிறது.